# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 29 வியாழக்கிழமை (14-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 250


## பலாலியில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு நேற்று மீண்டும் தனது விசாரணையைப் பலாலியில் ஆரம்பித்தது.

நேற்றைய விசாரணைக்கு 60பேர் அழைக்கப்பட்டிருந்த போதும் 39 பேர் மட்டுமே சென்றனர்.

விசாரணைகள் 5 தினங்கள் நடைபெறவிருக்கின்றன.

(இ-3)

## முச்சந்தி முரளி



அப்ப ஏதாவது ஒரு பாதை திறந்தால் போச்சு எண்ட நிலைமை வந்திட்டுது போல...!

# வெற்றி உறுதி ராணுவ நடவடிக்கை

# நேற்று மூன்று மாதங்கள் பூர்த்தி!

## வெற்றி - தோல்விகள் குறித்து பி. பி. சி. விமர்சனம்

லண்டன், ஒக. 14

மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வெற்றி உறுதி இராணுவநடவடிக்கை நேற்று மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

இந்த மூன்று மாதங்களில் இடம் பெற்ற வெற்றி தோல்விகள் குறித்து பி. பி. சியின் சிங்கள சேவைக்கு திவயின பத்திரிகையின் செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே பின்வருமாறு தெரிவித்தார்.

'' வெற்றி உறுதி '' இராணுவ நடவடிக்கையின்போது சுமார் ஆயிரம் விடுதலைப் புலிகளைக் கொல்லவும் சுமார் இரண்டாயிரம் பேரைக் காயப்படுத்தவும் பாதுகாப்புப் படைகளால் முடிந்தது என அரசு தெரிவிக்கிறது.

ஆனால் விடுதலைப் புலிகளின் தகவல்களின்படி அவர்களது தரப்பில் 401 பேரே பலியாகியுள்ளனர் 234 பேர் காயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என இராணுவத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கடந்த 3 மாதங்களில் படையினர் முன்னேறிய போது 11 அதிகாரிகளும் 151 படை வீரர்களும் கொல்லப்பட்டதாகவும் 300 படையினர் காயமடைந்ததாகவும் அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்ட பின்னர் படையினர் மீது விடுதலைப்புலிகள் மூன்று பாரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

முதலாவது தாக்குதலின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மன்னிப்புச் சபை

# 2 பிரதிநிதிகள் யாழ். வருகை

## மனித உரிமை மீறல் குறித்து விவரம் பெறுவர்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட். 14

ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இரு பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். குடாநாட்டில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து இவர்கள் நேரடியாக விவரங்களைச் சேகரிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இருவரும் யாழ்ப்பாணத்தில் 5 நாள்கள் தங்கியிருக்க ஏற்பாடாகியிருக்கின்றது.

மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் திட்டப் பொறுப்பாளர் இங்கிரிட் மஸேஜ் அம்மையார் —

மன்னிப்புச் சபையின் சட்டத்தரணியும், கனடாவை சேர்ந்தவருமான டேவிட் — ஆகியோரே இங்கு வந்துள்ளனர்.

இவர்களுடன் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட மேற்கு மாகாண சபை ஆளுநரின் பிரதிச் செயலாளர் எம். சி. எம். இக்பால் மொழி பெயர்ப்பாளராக வந்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர்கள் நேரடியாக விவரங்களைச் சேகரிப்பர்.

அரச அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் இவர்கள் இங்கு கலந்துரையாடுவர்.

சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் இங்கு தங்கியிருக்கும் இவர்கள் இன்று பல இடங்களுக்கு விஜயம் செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## 5 புலிகள் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, ஒக. 14

மட்டக்களப்பில் இரு வேறு சம்பவங்களில் 5 புலிகள் களப்பலியானதாக புலிகளின் குரல் அறிவித்தது.

துறைநீலாவணையில் இடம் பெற்ற சம்பவத்தில் மேஜர் விஷ்ணு, லெப்டினன்ட் சுபாசுதன், 2 ஆம் லெப்டினன்ட் தேவன், முருகராஜ் ஆகியோரும் —

மட்டக்களப்பு ரயில் நிலைய பொலீஸ் காவல் நிலையத் தாக்குதலில் லெப்டினன்ட் நித்திலனும் — களப் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

[இ-3-21-164]

## தராகி புறப்பாடு

மன்னாருக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'தராகி' கப்பல் நேற்று தலைமன்னார் இறங்கு துறையில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

இதுவரை காலமும் பேசாலை இறங்கு துறையில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் இனி தலைமன்னாரில் இருந்தே புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்து 201 பயணிகளுடன் நேற்று முன்தினம் மன்னார் வந்த இக்கப்பல் 290 பேருடன் நேற்றுப் புறப்பட்டது.

# ஐ. நா. தூதரக அதிகாரி மீண்டும்

# புலிகளை சந்திக்க வன்னி செல்வார்

## இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 14

வடக்குக்கான கப்பல்களுக்கு வழித்துணை வழங்கும் தனது நடவடிக்கைக்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒத்துழைப்பைப் பெறும் முயற்சியாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக பிரதிநிதி அடுத்த பத்து நாள்களில் மீண்டும் வன்னி செல்ல உள்ளார்.

இத்தகவலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக கொழும்பு அலுவலக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி போஷாக் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தாமே வன்னி செல்ல உள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர் நேற்று 'உதயன்' பத்திரிகைக்கு மேலும் தெரிவித்தாவது:-

வன்னியில் இருந்து மன்னார் சென்று யாழ்ப்பாணம் வருவதற்காக காத்திருக்கும் அகதிகளின் இன்னல்களைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து புலிகள் பகுதிக்கு

## பாதை திறக்கும் முயற்சியில்

## வவுனியா அரச அதிபர் ஈடுபாடு

வவுனியாவில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கான பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வவுனியா அரச அதிபரின் பிரதிநிதி ஒருவர் நேற்று அங்கு சென்றுள்ளார்.

வன்னியில் இருந்து வவுனியா வர கடந்த காலங்களிற் பயன்படுத்தப்பட்டு வந்த தாண்டிக்குளம் பாதை கடந்த 3 மாதங்களாக மூடப்பட்டுள்ளதால், வவுனி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மண்எண்ணெய் வியாபாரிகள் மீது படையினர் நேற்று நடவடிக்கை

யாழ். நகரில் நேற்று கூடுதல் விலைக்கு மண் எண்ணெய் மற்றும் எரிபொருள்களை விற்றதாக ஆறு வியாபாரிகள் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

விற்பனைக்காக இவர்கள் வைத்திருந்த எரிபொருள்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் தளபதி கேணல் சுஸந்த மெண்டிஸின் உத்தரவின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக 512 ஆவது பிரிக்கேட் வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் பாதுகாப்புடன் மன்னார்-காங்கேசன் கப்பல் சேவை

கொழும்பு, ஓக. 14

மன்னார்—பேசாலைப் பகுதியில் ரோந்து செல்வதற்கு போதிய கலங்கள் கடற்படையினரிடம் இல்லாத போதும், மன்னாரில் இருந்து—காங்கேசன்துறைக்கு பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பலுக்கு வழித்துணை வழங்க வேண்டிய நிலை கடற்படையினருக்கு ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னாரில் இருந்து காங்கேசன்துறைக்கு வாரத்தில் மூன்று நாள்கள் பயணிகள் கப்பல் சென்று திரும்பிவர கடற்படை பாதுகாப்பு வழங்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## கலைப்பீட மாணவர்களுக்கான அவசரக் கூட்டம்

**நேரம்:** காலை 11 மணி
**காலம்:** இன்று 14 . 8 . 97 வியாழக்கிழமை
**இடம்:** கைலாசபதி கலையரங்கு.

அனைத்து கலைப்பீட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்;

- செயலாளர்

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(48989)

## மலிவு விற்பனை

றெடிமெற் ரவுசர்,
சகல அளவிலும்
விற்பனைக்கு உண்டு.
**விலைரூபா—250/-**
இம்போட்டெட்
சீஸ் குளோத்
**மீற்றர் 80/-**
இந்தியன்
பெற்சீற் **—225/-**
இம்போட்
செக்சேட் **—475/-**

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,**
41, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(48985)

# கொழும்பு ஆஸ்பத்திரியில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, ஓக. 14

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய ஆஸ்பத்திரிக்கும் விபத்து சேவைப் பகுதிக்கும் செல்வோர் அதிரடிப்படையினரால் சோதனையிடப் படுகின்றனர்.

இதற்காக தனியான சோதனைப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன:

போர் முனையில் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான படையினர் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளர்களைப் பார்வையிடுவதாகக் கூறிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குள் குண்டுகள் எடுத்துச் செல்லப்படலாம் எனக் கருதியே சோதனை மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## பிறப்புச் சான்றிதழ்கள்

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இதுவரை காலமும் நண்பகல் 12 மணி வரை மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 13-8-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வவிநாயகம் (முன்னாள் ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற தர்மலிங்கம், இராசம்மா, சபாநாயகம் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), பரமேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகை, நடராசா, பத்மினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14-08-97) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் உரும்பிராய் கிழக்கில் (கரந்தன்) உள்ள ''மகேஸ்வரி இல்லத்தில்'' நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க.சபாநாயகம்
(மகன்)

''மகேஸ்வரி இல்லம்''
உரும்பிராய் கிழக்கு.

(48984)

### துரையப்பா நாகநாதன்

சுன்னாகம், உடையார் வளவைச் சேர்ந்த துரையப்பா நாகநாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சாரதாதேவியின் அன்புக் கணவரும், பிரேமிளா, சிறீநாதன் (கனடா), மேகலா, சௌந்தரநாதன் (சுவிஸ்), உதயகுமார் [கண்ணன்—U. K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி ஞானாம்பிகை மாணிக்கவாசகர் (கனடா), திருமதி ரட்ணாம்பிகை குமாரசிங்கம், திருமதி பரமேஸ்வரி சிதம்பரநாதன், திருமதி தங்கம்மா மகேசன் ஆகியோரின் சகோதரரும், செல்வேந்திரன், ஈஸ்வரி, ஆனந்தராணி, உருத்திரகுமார் (அப்பு U. K) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.மகேசன்
(மைத்துனர்)

உடையார் வளவு,
சுன்னாகம்.

(48980)

### கனகராசா இரத்தினேஸ்வரி

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகராசா இரத்தினேஸ்வரி 97-08-12 ஆம் திகதி இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசுந்தரம் கனகராசாவின் அன்பு மனைவியும், சியாமளா, முரளீதரன், சசிகலா, வத்சலா, ஶ்ரீதரன், பரணீதரன் (லண்டன்), காலஞ்சென்ற ராதிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேஸ்வரன் (உ. அ. அ. பணிமனை, ஊர்காவற்றுறை), விஸ்வமூர்த்தி, விமலசிறி, வாணி, மதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தி. இராஜேஸ்வரன்
(மருமகன்)

94, பழம் றோட்,
கந்தர்மடம்.

(4898?)

## புறநிலைப் படிப்புகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## Extra . Mural Studies Unit

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் அடிப்படைக் கற்கைநெறிகளை நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும். இக்கற்கை நெறிகளைப் பயில ஆர்வம் கொண்ட வயது வந்த எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம் அடிப்படைக் கற்கை நெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனை கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். ஒரே நேரத்தில் ஒரு கற்கை நெறியைப் பயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர்.

அடிப்படைக் கற்கை நெறிகள் பின்வருமாறு:-

1. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication)
2. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
3. பெண்களும் அபிவிருத்தியும்
4. பொது உளச்சார்பு
5. புனர்வாழ்வு புனருத்தாரண, மீள் ஒருங்கமைப்பு
6. கிராம அபிவிருத்தி
7. சர்வதேச விவகாரம்.

மேலும் வேறு கற்கை நெறிகளைக் கற்பதற்கு போதியளவு எண்ணிக்கையினர் கோரிக்கை விடுக்குமிடத்தும் அவற்றைக் கற்பிப்பதற்கு புலமைச் சான்றோர் கிடைக்குமிடத்தும் அவற்றைக் கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால் இதற்கு இலகுவாகப் பொது மக்களிடமிருந்து கற்க விரும்பும் கற்கை நெறிகள் பற்றிய விவரங்களை புறநிலைப்படிப்புகள் அலகு அறிய விரும்புகின்றது. தயவுசெய்து எழுத்து மூலம் அறியத்தரவும்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.

13-08-1997
புறநிலைப்
படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணம்.

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

[வரையுள்ளது]

**பதிவு இலக்கம்:- 1591 - 6. 3. 72**

1. கிளைக்குழுத் தேர்தல் தொடர்பாக:- சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ளதால் வாக்காளர் இடாப்பு 30-9-97 இல் மூடப்படவுள்ளது. அங்கத்தவர்கள் பங்குப் பணத்தினை முழுமையாக 30-9-97 ஆம் திகதிக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

2. இலிகிதர், விற்பனையாளர், காரியாலய சேவகர், சாரதி (பயிற்சியாளர்) பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 22-8-97 ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்தவர்களுக்கு கடிதங்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நா. கணேசன்
தலைவர்.

செ. திருஞானம்
செயலாளர்.

ஆனந்தா வீதி, மானிப்பாய்.

(47381)

## ஆதனங்கள் விற்பனைக்கு

1. சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்த ' நல்ல குட்டி வளவு ' ( நி. ப. 30 குழி 9½ )என அழைக்கப்படும் ஆதனம் பகுதி பகுதியாகவோ முழுமையாகவோ விற்பனைக்கு உண்டு.

2. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சந்தைப் பகுதியை அண்டி வியாபார நிலையம் ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**த. சபாநாயகம்,**
( உத்தரவு பெற்ற நில அளவையாளர் )
இல. 11, தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி.

(சி/1315)

## முதலாம் வருட நினைவஞ்சலி

உதயம்:
15—02—1975



மறைவு:
26—07—1996

### செல்வி உதயசந்திரிகா நவரத்தினம்

**திதி:- 14 - 08 - 97**

கட்டுடை மதவடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி உதயசந்திரிகா நவரத்தினம் 26 - 07 - 96 அன்று சிவபதம் அடைந்து விட்டார். இவர் நவரத்தினம் - அற்புதம் தம்பதியினரின் மூத்த மகளும், உதயச்சந்திரன், உதயதர்மினி, உதயசீலன், உஷாயினி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார். அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டி நிற்கும்:

குடும்பத்தினர்.

மதவடி ஒழுங்கை,
கட்டுடை, மானிப்பாய்.

(48986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் அரசு விதித்த

# தடைகளை எதிர்த்து பலஸ்தீனியர் பேரணி!

### அமெரிக்கத் தூதுவரின் கொடும்பாவி எரிப்பு

மேற்குக்கரை ஓக. 14

ஜெருஸலேம் நகரில் கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இஸ்ரேல் அரசு விதித்துள்ள பொருளாதார, போக்குவரத்துத் தடைகளைக் கண்டித்து மேற்குக்கரை நகரான நெளலிஸ்ஸில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதர் டெனிஸ் றோஸின் கொடும்பாவி ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீக்கிரையாக்கியதாக அறிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனியர்கள் மீது விதித்துள்ள—பாதுகாப்புடன் தொடர்பு படாத — தடைகளை நீக்கிவிடுமாறு அமெரிக்கத் தூதர் டெனிஸ் றோஸ் ஏற்கனவே இஸ்ரேலிடம் கோரியிருந்தார்.

இதேவேளை—

இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு ஜோர்தான் மன்னர் ஹுசேய்னைச் சந்திப்பதற்காக அம்மானுக்கு சென்றுள்ளார்.

பிரச்சினைகளில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நத்தனியாகுவிடம் இல்லை என்று மன்னர் ஹுசேய்ன் அண்மையில் கூறிய கருத்துக்களை அடுத்து இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையேயான உறவு நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில்—

சமாதான முயற்சிகள் சரியான திசையில் நடைபெற்றுவருவதாக அமெரிக்கப் பிரதிநிதி டெனிஸ் றோஸ் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து மத்திய கிழக்கில் மேலும் சில நாள்கள் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# தஜிகிஸ்தானில் சமரசப் பேச்சு!

### சண்டையை நிறுத்த முயற்சி

துஷான்பே, ஓக. 14

தஜிகிஸ்தான் நாட்டில் இடம் பெற்று வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சமரசப் பேச்சுக்கள் தலைநகர் துஷான்பேயில் ஆரம்பமாகியுள்ளன.

சண்டையில் ஈடுபட்டு வரும் போட்டிக் கிளர்ச்சிக்குழு ஒன்றின் தளபதியைச் சந்திக்க ஜனாதிபதி இமோமாலி ரக்மனோவ் இணங்கியுள்ளார்.

மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் படியும், அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்து கொள்ளுமாறும் அரச துருப்புக்களை அவர் கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப்படையினரின் மற்றொரு தளபதியின் படையினரும் இணைந்து கூட்டாகச் செயற்பட்டு வருகின்றனர்.

போட்டிக் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் கடந்த சனியன்று ஆரம்பமாகின. (ஐ)

# பொன்விழாக் கொண்டாட்டங்கள் இன்று நள்ளிரவு முதல் ஆரம்பம்

### இந்திய நகரங்கள் விழாக் கோலம்

புதுடில்லி, ஓக. 14

இந்தியாவின் பொன்விழாக் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட நாடு முழுவதுமே ஆயத்தமாகி வருகின்றது. கொண்டாட்டங்களின் முக்கிய நிகழ்ச்சி நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் இன்று நள்ளிரவு நடைபெறும்.

அரை நூற்றாண்டுக்கு முன்பு நாடு சுதந்திரம் பெற்றபோது நிலவிய உணர்வுகளை மீண்டும் படம் பிடித்துக் காட்டுவதாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கும்.

மகாத்மா காந்தியின் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையும் ஜவர்ஹர்லால் நேரு ஆற்றிய 'விதியை எதிர்கொள்வோம்' என்ற புகழ்மிக்க உரையும் நள்ளிரவு நிகழ்ச்சியின் போது ஒலிபரப்பாகும்.

நள்ளிரவு 12 மணிக்கு பொன்விழா தொடங்குவதைக் குறிக்க இசைக் குழுவினர் தேசியகீதம் இசைப்பார்கள். தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படும்.

அதையடுத்து பிரபல இசைக் கலைஞர் பண்டிற் பியூஷன் ஜோர்ஸி வந்தே மாதரம் பாடலைப்பாடுவார். தொடர்ந்து பிரபல பாடகர் லதா மங்கேஸ்கர் கவிஞர் இக்பாலின் 'சாரே ஜஹாங்கே அச்சா' பாடலைப் பாடவுள்ளார்.

அதன் பின்னர் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் உரையாற்றுவார். இந்த நிகழ்ச்சியில் பல்துறைப் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொன் விழாக் கொண்டாட்டங்களை ஒட்டி டில்லியிலும் ஏனைய நகரங்களிலும் வாலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

விசேட ஊர்வலங்கள், கருத்தரங்குகள், உரைக்கோவைகள், பொருட்காட்சிகள், பிரார்த்தனைக் கூட்டங்கள் ஆகியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை — இந்தியாவின் சுதந்திரப் பொன் விழாவையொட்டி விசேட முத்திரை ஒன்றை ரஷ்யா வெளியிட உள்ளது. இந்தத் தபாற் தலை நாளை ரஷ்யாவின் தொலைத் தகவல் தொடர்பு அமைச்சினால் வெளியிடப்படும். (ஐ-5)

# பல நாடுகளாக இந்தியா சிதறுமா?

### மக்கள் கருத்துக் கணிப்பு

புதுடில்லி, ஓக. 14

இந்தியா தொடர்ந்தும் வலுவான ஒரு நாடாக இருக்குமா அல்லது துண்டு துண்டாக உடையுமா?

இதை அறிந்து கொள்வதற்காக மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை 'இந்தியா ருடே' சஞ்சிகை அண்மையில் நடத்தியது.

இந்தக் கணிப்பின் போது இந்தியா இன்னும் 50 ஆண்டுகளில் பல நாடுகளாகப் பிரிந்துவிடும் என்று மூன்றில் ஒரு பங்கினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியா தொடர்ந்தும் ஒரே நாடாக இருக்கும் என்று 41 சதவீத மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தியா பல நாடுகளாகச்சிதறிவிடும் என்று 36 சதவீதமானோரும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைக் கூறமுடியாது என்று23 சதவீதமானோரும் கருத்துக் கூறியுள்ளனர்.

அரசியல்வாதிகள் நேர்மையானவர்களா என்ற கேள்விக்கு பெரும்பாலானவர்கள் 'முகம் சுழித்தனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 சதவீதமானோர் மட்டுமே இக் கேள்விக்கு 'ஆம்' என்று தலையசைத்தனர். (ஐ)

## 'கிழவன்' என்று கிண்டலடித்த

# கெளடாவுக்கு கேசரி காரசாரமாகப் பதில்

முன்னாள் பிரதமர் எச். டி தேவகௌடா பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் ஆற்றிய இறுதி உரையில் 'ஒரு கிழவர் அவசரப்படுகிறார்" என்ற சாரப்பட கிண்டலாகக்கூறிய கருத்துக்கு 4 மாதங்களின் பின்னர் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி காரசாரமாகப் பதிலடி கொடுத்துள்ளார்.

கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் தேசிய மாநாட்டில் தலைமையுரையாற்றுகையிலேயே தேவகௌடாவுக்கு அவர் பதிலடி கொடுத்துள்ளார்.

## உலக அரங்கில்

கேசரியின் அந்த உரை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

நான் அவசரத்தில் இருக்கிறேன் என்பதை ஒப்புக் கொள்ள விரும்புகிறேன். இந்திய இளைஞர்களை வெறுப் புணர்வில் இருந்தும் சோகத்தில் இருந்தும் மீட்பதில் இந்தக் கிழவன் அவசரமாக இருக்கிறான். நான் கிழவன்தான். ஆனாலும் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கிறேன். இந்தியா வலுவாக, ஒற்றுமையாக, ஒளிமயமாகத் திகழ்வதைக் காண விரும்புகிறேன்.

'இந்தியா" எப்போதுமே மதசார்பற்ற நாடாக இருக்கும் என்பதைப் பிரகடனப்படுத்த அவசரப்படுறேன். சிறுபான்மையரின் பயங்களைப் போக்கி நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த இந்தக் கிழவன் விரும்புகிறான்.

"இன்னும் சில ஆண்டுகளில் டில்லியைப் பிடித்து இவற்றை நிறைவேற்ற இந்தக் கிழவன் அவசரப்படுகிறான்"- என்று கேசரி தனது உரையில் ஆவேசமாகக் கூறினார். (ஐ)

# கறுப்புக் கொடி காட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஓக. 14

இந்தியா சுதந்திரம் அடைந்த 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நாளில் எங்காவது கறுப்புக் கொடி ஏற்றப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவதும் இயல்பு. ஆனால் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது அரசியல் கட்சிகள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது எமது சுதந்திரத்துக்கு நாம் கொடுக்கும் மரியாதை. இதை விடுத்து அன்றைய தினம் எமது சுதந்திரத்துக்கு நாமே எதிர்ப்புக் காட்டுவது துரோகமாகும்.

அன்றைய தினம் கறுப்புக்கொடி காட்டுவதோ, அல்லது கறுப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்துவதோ குற்றமாகும். அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பது அரசின் கடமை ஆகும் — இவ்வாறு கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# அஸாம் மாநிலத்தில் பூரண ஹர்த்தால்

புதுடில்லி, ஓக. 14

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் நேற்றுக் காலை முதல் 36 மணிநேர முழு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கப்பட்டதை அடுத்து மாநிலம் முழுவதும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதற்றம் ஏற்படக்கூடிய பகுதிகளில் மேலதிகமாக பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

போடோ தனி மாநிலம் அமைக்கப்பட வேண்டும். எனக் கோரிவரும் 'அனைத்துப் போடோ மாணவர்கள் சங்கம்' இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இன்று நள்ளிரவு முதல் ஆரம்பமாகும் 50 ஆவது சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் அஸாமின் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்று அஸாம் முதலமைச்சர் பிரவுல்ல குமார் மொகந்தா குற்றஞ் சாட்டி உள்ளார். (ஐ-5)

# அதிபர் கிளின்ரன் இந்தியா விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அடுத்த ஆண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருப்பதாக பிரதமர் ஐ. கே குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை முதல் ஒரு வருட காலத்துக்கு கொண்டாடப்படவுள்ள இந்திய சுதந்திரதின விழாக் கொண்டாட்டங்களின் போது புதுடில்லிக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை ஜனாதிபதி கிளின்ரன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

1978ஆம் ஆண்டு ஜனவரியில் அப்போதைய ஜனாதிபதி ஜிம்மி காட்டரின் இந்திய விஜயத்திற்குப் பின்னர் அமெரிக்க அதிபர் ஒருவர் புதுடில்லிக்கு வரவிருப்பது இதுவே முதற் தடவையாகும். (ஐ)

# அநாதைப் பெண் குழந்தைகளை சீனாவில் வாங்கும் அமெரிக்கர்!

ஹொங்கொங், ஓக. 14

சீன நாட்டின் அநாதைப் பெண் குழந்தை ஒன்றைப் பெற 3 ஆயிரம் அமெரிக்க டொலர் செலுத்தும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்சீனாவில் உள்ள டுவாங்ஷோ நகரில் உள்ள குழந்தை பராமரிப்பு நிலையத்தில் அநாதைக் குழந்தைகளைப் பெற அமெரிக்கர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சுவீகாரம் செய்ய 3 ஆயிரம் டொலர் உட்பட 15 ஆயிரம் டொலர் அவர்களால் செலவிடப்படுகின்றது

இந்தவருடம் 3 ஆயிரத்து 300 குழந்தைகள் அமெரிக்கர்களால் சுவீகாரம் செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் ஓர் ஆண் குழந்தை திட்டத்தை ஆதரிக்கும் பெற்றோரால் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளே இப்படியான பராமரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக அரங்கக்கல்லூரி

கருத்தரங்குத் தொடர் - 01

சிறுவர் அரங்கு

குழந்தை ம. சண்முகலிங்கம்

காலம்:- 16 - 08 - 97 சனி மாலை - 3-30 மணி
(புதிய நேரம்)


இடம்:- யா. கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- இணைப்பாளர்

நாடக அரங்கக் கல்லூரி,
கந்தர்மடம். (48970)


# 31 ஆம் நாள் நினைவு



தோற்றம்: 09 — 02 — 1940

மறைவு: 15 — 07 — 1997

அமரர்
## பொன்னையா ஞானேஸ்வரன்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் உறவினர்கள்

வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை. (48981)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

கவனிப்பாளர்
(சுகாதார சேவைகள்)
ஒப்பந்த அடிப்படை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பொருத்தமான பெண் அபேட்சகர்களிடமிருந்து 97-08-28-ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:-
கவனிப்பாளர் (சுகாதார சேவைகள்) ஒப்பந்த அடிப்படை.

வயது:-
விண்ணப்ப முடிவு திகதியில் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (அரச பணியில் இருப்பவர்களுக்கு வயது எல்லை பொருந்தாது).

சம்பளம்:-
மாதமொன்றுக்கு நிலையான சம்பளமாக ரூபா 4696-88 மட்டும் வழங்கப்படும்.

தகைமைகள்:-
அ. குறைந்தது எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
ஆ. வைத்தியசாலையொன்றில் அல்லது சுகாதார நிலையமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு:-
பொது உளச்சார்பு பரீட்சை மூலமாகவும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தாபனக் கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொளளப்படும் படிவங்களில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பமுடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1997 - 08 - 11

(இ-1306)


# உரிய பராமரிப்பு இல்லையேல் முட்டை இடும் வீதம் குறையும்

## கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு, ஒக. 14

யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியர் பிரிவினரால் கடந்த வருடம் விமானம் மூலம் தருவித்து விநியோகிக்கப்பட்ட "சேவர்" இன கோழிகளில் இருந்து எதிர் பார்த்த அளவு முட்டை உற்பத்தி கிடைக்கவில்லை என்ற பண்ணையாளர்களின் கூற்றினை வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை கால்நடை பிரிவு வைத்தியர் ந. அருள் நேசன் ஏற்க மறுத்துள்ளார்.

கால்நடை வைத்தியர் பிரிவினரின் ஆலோசனைகளின் படியும், உரிய காலங்களில் தடை மருந்து வழங்கியும் சரியான அளவில் தீவனம் வழங்கியும் வளர்க்கப்படும் இவ்வினக் கோழிகளில் இருந்து 90 சதவீத முட்டை உற்பத்தியைப் பெறமுடியும். அக்கறை குறைந்த வளர்ப்பினாலேயே உரிய முட்டை உற்பத்தியைப் பெற முடியாது போகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேசங்களைச் சேர்ந்த சிறுபண்ணையாளர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"சேவர்" இன கோழிகளின் தாய் வழி கனடாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. ஒரு நாள் குஞ்சு ஒன்றினைக் கொண்டுவர 450 ரூபா வரை செலவாகிறது. அதன் மூலம் பெறப்படும் குஞ்சுகள் கடந்த பத்து வருடங்களாக இங்கு நல்ல பலனைத் தந்துள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 'சேவர்' இன கோழிகளின் வளர்ப்பு முறை சரியின்மையினால் தான் உரிய பலனைப் பெற முடியாதுள்ளது.

தரமற்ற கோழித்தீவனங்கள் பாவிப்பது, திறந்து வளர்ப்பது, உரிய முகாமைத்துவ முறைகளின்மை போன்ற பல காரணங்கள் முட்டை உற்பத்தியைக் குறைக்க வழி செய்யும்— என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-152)

## ஜென்ம தினம் அனுஷ்டிப்பு

திருநெல்வேலி, ஒகஸ்ட் 14

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை பௌர்ணமி தினத்தன்று ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேர் சீடரான சுவாமி நிரஞ்ஞானந்தர் மகராஜ் அவர்களின் ஜென்ம தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்று பஜனை, பூசை, அன்னதானம் ஆகிய நிகழ்ச்சிகள் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-135)

## பாலர் விளையாட்டு விழா

சண்டிலிப்பாய் ஒகஸ்ட் 14

மானிப்பாய் மேற்கு கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சிறுவர் பாடசாலை விளையாட்டு விழா அண்மையில் சங்கத் தலைவர் கி. பொ. வா. முதலியார் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (ஐ-135)

## இடர்கால நிதி வழங்கக் கோரிக்கை

திருகோணமலை, ஒக. 14

கப்பல் வசதியின்றி திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்கு இடர்காலக் கடன் வழங்குமாறு வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபை தலைவரை திருமலை அரச அதிபர் சங்கரதாஸ் கேட்டுள்ளார். (உ-3-150)

## ஐ. நா. தூதரக உதவிகள்

தென்மராட்சி ஒக. 14

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் — 100 குடும்பங்களுக்கு மலகூடங்களும் இப் பகுதி மக்களின் பாவனைக்கென 15 பொது குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன.

மலகூடங்கள் தலா ரூபா 15 ஆயிரம் செலவிலும் பொதுக் குழாய்க் கிணறுகள் தலா 35 ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளன.

மலசலகூடங்கள் அமைப்பதற்கு தகுதியுடைய குடும்பங்களைத் தெரிவு செய்வதற்கான குழு ஒன்று தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சொடிகாமம் திருநாவுக்கரசு [illegible] [illegible] தெரிவு செய்யப்பட்டது. (உ-117)

## உள்ளூராட்சி எழுதுநர்களுக்கு இரு நாள் பயிற்சி நெறிகள்

வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவின் ஆதரவுடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் நெறிப்படுத்தலின் கீழ் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர், கணக்குப்பதிவாளர், கணக்கு எழுதுநர்களுக்கான பயிற்சி நெறி யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தலைமையில் ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சி நெறியில் முதல் நாளன்று பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார். அதனைத் தொடர்ந்து பயிற்சி சம்பந்தமான உரைகள் இடம்பெறும்.

யாழ். உள்ளூராட்சித்திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் ப. பரம்சோதி தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாம் நாள் பயிற்சி நெறியில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-135)

## அதிபர் நியமனம்

திருநெல்வேலி, ஒக. 14

வேலணை கிழக்கு மகா வித்தியாலய அதிபராக வி. ஏ. சிவராஜா கடந்த 6 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இதுவரை கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். (ஐ-135)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வைத்திலிங்கம் சிங்கவேலு
(உரிமையாளர், மருதனார் மடம் எரிபொருள் நிலையம்)

அன்னை மடியில்: 05-11-1917

ஆண்டவன் அடியில்: 18-07-1990

திதி: 14-08-1997

எங்கள் குடும்பத்தலைவனே! நீங்கள்
எங்களை விட்டுப்பிரிந்து ஏழு ஆண்டுகள்
பூர்த்தி அடைந்தாலும் நாங்கள் இறக்கும்
வரையும் உங்கள் நினைவாக நீங்கள்
செய்தவற்றை நினைவு கூர்ந்து
உங்கள் நினைவாகவே இருக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

238, கோயில் வீதி,
நல்லூர். (48978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஜெனநூலகம்.

# குறைந்த மாணவரைக் கொண்ட பாடசாலைகள் மூடப்படமாட்டா

கொழும்பு, ஓக. 14
மாணவர்களின் எண்ணிக்கை 115- க்குக்குறைவாக உள்ள பாடசாலைகள் மூடப்படமாட்டா என்று கல்வி உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

115 மாணவருக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதில்லை என்று கல்வி உயர் கல்வி அமைச்சு அண்மையில் முடிவு செய்ததை அடுத்து இத்தகைய பாடசாலைகள் மூடப்பட்டுவிடும் என்று பரவலாகப் பேச்சடிபட்டு வந்தது. இதனையடுத்து தற்போது புதிய சுற்றறிக்கை ஒன்றை அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

மாணவர் எண்ணிக்கை 115 -க்கு குறைவாக உள்ள பாடசாலைகளுக்கும் அதிபர்கள் நியமிக்கப்படுவர் என்று அதில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டு 1 - 5 ஆண்டு 1 - 8 வரையான ஆண்டுகளில் மாணவர் எண்ணிக்கை 115 ஆக உள்ள பாடசாலைகளுக்கும், அடிப்படைப் பாடசாலைகளுக்கும் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அத்தகைய அதிபர் நிர்வாகக் கடமைகளை விட மேலதிகமாகவாரம்ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 10 மணித்தியாலங்கள் வரையான நேரம் கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.

இவை தவிர ஏனைய சகல பாடசாலைகளுக்கும் ஆசிரிய எண்ணிக்கை, பிரிவுத் தலைவர்களுக்கு மேலதிகமாக அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவார்—என்று புதிய சுற்றறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. [ஐ]

# தக்காளிச் செடிகளில் இலை கருகல் நோய்

உரும்பிராய். ஓக. 14
கோப்பாய் பிரதேசத்திலுள்ள இருபாலைப் பகுதியில் பயிரிடப்பட்ட தக்காளிப் பயிர்கள் ஒருவித கருகல் நோய்க்கு ஆளாகியுள்ளன. கூடிய வெப்பமும் அனற்காற்றுமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என விவசாயிகள் நம்புகின்றனர்.

இதன் காரணமாகப் பயிர்ச்செய்கையாளர்கள் நஷ்டமடைந்துள்ளனர். இதற்கு விசிறக் கூட்டிய மருந்துவகைகள் எதுவும் இல்லையெனக் கூறப்படுகிறது. (ஐ-154)

# சாவகச்சேரியில் இருந்து பாடசாலை பஸ் சேவை

## அடுத்த தவணை முதல் ஆரம்பம்

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து தனங்கிளப்பு நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணம் வரையிலான பாடசாலை பஸ் சேவையினை மூன்றாந் தவணை ஆரம்ப தினம் முதல் தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பாடசாலை மினிபஸ் தனங்கிளப்பு நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்து பி.ப. 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாகச் சாவகச்சேரி பஸ் நிலையத்தை வந்தடையும். (ஐ-117)

# சமய சந்நிதிகளில்

குப்பிளான் கற்பகவிநாயகர் ஆலய திருமுறை விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு குப்பிளான் கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

விழாவில் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். பண்ணிசைக்கச்சேரியும் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

கோண்டாவில் குமர கோட்டம் சித்திவைரவர் அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ - 4)

★ ★ ★

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஐ-4)

★ ★ ★

அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தான மஹோற்சவ விழா எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27 ஆம் திகதி புதன்கிழமை முடிவடையும்.

25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மாலை 4 மணிக்கு உறியடி உற்சவமும் நடைபெறும்.

26 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும். (ஐ-152)

★ ★ ★

ஏழாலை வசந்தபுரம் அருள்மிகு வசந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் கடந்த 6 ஆம் திகதி முதல் ஏகாதச தின இலட்சார்ச்சனை நடைபெற்றுவருகின்றது. பதினொரு தினங்கள் நடைபெறும். இவ்விலட்சார்ச்சனை எதிர்வரும் சனிக்கிழமையுடன் முடிவடையும்.

அன்றையதினம் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதிவலம் வருதலும், அன்னதானவைபவமும் நடைபெறும். (ஐ-152)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதிமுருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 'சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை, 'சுப்புக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை" என்ற தலைப்பில் வ. ஆ. தங்கமயில் சொற்பொழிவாற்றுவார். (ஐ 30)

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். அதனை அடுத்து சுவாமி வீதிவலம் வருவார். (ஐ-30)

★ ★ ★

யாழ். புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை திருவிழா திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகிய நிகழ்வுகளுடன் நிறைவு பெறும். (ஐ-30)

★ ★ ★

மன்னார்ப் பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக விளங்கும் மருதமடு மாதாவின் ஆவணித்திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை திருவிழாத்திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் விழா நிறைவுபெறும். (ஐ-30)

# மாணவர் அ. அட்டைகள் செயலகத்தில் தேக்கம்

நவாலி, ஓக. 14
பாடசாலைகள் ஊடாகத் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் பெரும் எண்ணிக்கையானோரின் தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலக ஆட்பதிவுக் கிளையில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது விடுமுறைக் காலமாதலால் அதிபர்கள் அங்கு சென்று அவற்றைப் பொறுப்பேற்காததை அடுத்தே அடையாள அட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன. (ஐ-100)

# 'சீநோர்' தொழிலாளர் அபிவிருத்திச் சபை

குருநகர், ஓக. 14
குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்கும் நோக்குடன் வேலை இழந்த தொழிலாளர்கள் ஒன்று கூடி 'சீநோர் தொழிலாளர் அபிவிருத்திச் சபை' என்ற அமைப்பை அண்மையில் அமைத்துள்ளனர்.

வேலையிழந்த ஊழியர்கள் சுமார் 40 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் யாகப்பர் ஆலய மண்டபத்தில் பதில் உற்பத்தி மேற்பார்வையாளர் அ. பாலதாஸ் தலைமையில் கூடி கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

தற்போதுள்ள தொழிலாளர்களைக்கொண்டு 'சீநோர்' வலைத் தொழிற்சாலையை மீண்டும் இயக்க முடியும் எனவும்—

இதுவரை வழங்காமல் உள்ள இரண்டு மாத சம்பளத்தை தலைமை அலுவலகத்தில் இருந்து பெற நடவடிக்கை மேற்கொள்வது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-51)

## நல்லூருக்கு விசேட பஸ் சேவை

தென்மராட்சி, ஓக. 14
நல்லூர் மஹோற்சவத்திற்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை தினமும் விசேட மினிபஸ் சேவைகளை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி பஸ்நிலையத்திலிருந்து நல்லூர் கோயில் வரை விசேட பஸ் சேவை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## மலேரியா பரிசோதகர் இல்லை

செம்பியன்பற்று, ஓக. 14
அம்பன் மத்திய மருந்தகத்தில் மலேரியா இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள முடியாதுள்ளதால் வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் இரத்தப் பரிசோதனை செய்ய வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அம்மன் மத்திய மருந்தகத்தில் மலேரியா இரத்தப் பரிசோதகர் எவரும் கடமையில் இல்லை. (ஐ-36)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய், ஓக. 14
கட்டுடை சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் கடவுள் சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொண்டார். (ஐ-135)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

1. மேற்படி திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் யாழ்ப்பாணம் நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரினால் 1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் இக் காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் 9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரத்தினை யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1997 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| மாவட்ட வைத்திய அதிகாரி விடுதி சாவகச்சேரி வைத்தியசாலை | 3, 500/- | 250/- |
| கிராமோதய சுகாதார நிலையம் மந்துவில். | 9, 500/- | 500/- |

5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம் அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள, நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர் (நிர்மாண)
யாழ்ப்பாணம்,

நிர்மாணத்திணைக்களம்,
[illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
14-08-97

(சி-1311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறு குழுக்களாக ஆங்கிலம் பயில (எழுத, வாசிப்பதில் சிரம மானவர்க்கும்) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (48957)

### விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட 2½ மாத கறுப்பு வெள்ளை நிற பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றோசா தோட்டம் (தலங்காவல் பிள்ளையார் கோயிலடி முன்பாக) திருநெல்வேலி. மேற்கு. [48965]

### ஓர்கன் வகுப்பு

ஓர்கன், கிற்றார், புல்லாங்குழல் ஆகிய வகுப்புகள் எல்லா நாள்களிலும் 2மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி: கரவீணா கற்பக பிள்ளையார் கோயிலடி. 23, குறோசற் வீதி, சுண்டுக்குழி (கல்வி வலயம் I இன் அருகாமையில்). [48864]

## சீருடை பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். போதனா வைத்திய சாலை சிற்றூழியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்வாண்டுக்கான சீருடை பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேவையானதை விட சுமார் 42 மீற்றர் சீருடைத் துணி குறைவாக அனுப்பப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆஸ்பத்திரி நிர்வாகம், சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டுள்ளது. (ஐ-15)


**G. A. Q - 98**

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

**B. A. PartI**

ஆரம்பம்: 16 - 08 - 97 (9. 00 மணி)

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(48976)



**A/L 99 (கலை - வர்த்தகம்)**

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

பொது உளச்சார்பு

வகுப்புக்கள் பிரிவு I ஆரம்பமாகிவிட்டன

ஆசிரியர்: அ. குமாரவேல்

குறிப்பு: பிரிவு II ஆரம்பம்: 16 - 08 -97

இப்பிரிவுக்குதனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும். மாணவர் வசதிக்கு ஏற்ப நேர அட்டவணை ஒழுங்கு படுத்தித் தரப்படும்.

நிர்வாகி

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(48975)


## எழுதுமட்டுவாளுக்கு அப்பால் கண்டி வீதி பலத்த சேதம்

### போக்குவரத்துககு இடைஞ்சல்


தென்மராட்சி, ஓக. 14

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் எழுதுமட்டுவாள் தொடக்கம் புதுக்காட்டுச் சந்தி வரையிலான பகுதி சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வீதியில் பயணஞ் செய்வோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணம் தொடக்கம் எழுதுமட்டுவாள் வரையிலான இவ் வீதி செப்பனிடப்பட்டு பல இடங்களில் இரு தடவைகள் தார் ஊற்றப்பட்டுள்ள போதிலும் எழுதுமட்டுவாளுக்கு அப்பால் உள்ள வீதி திருத்தப்படாதுள்ளது.

இப் பகுதி கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது என்பதால் யாழ். மாவட்ட வீதிஅபிவிருத்திஅதிகார சபையினர் இதனைத் திருத்த முன்வரவில்லை எனச் சிலர் கருத்துத் தெரிவித்தனர். (ஐ-117)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**ஆனந்தலட்சுமி கோபாலபிள்ளை**

(கௌரி)

அன்னை மடியில்: 31—10—1980

ஆண்டவன் மடியில்: 19—07—1994

திதி: 14—08—1997


ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
ஆயிரமாண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ நெஞ்சம்;
பாசத்தின் ஊற்றாகி நேசத்தை
பொழிந்தவளே ஆனந்தலட்சுமியே!
நித்தம் நித்தம் உனை நினைந்து
வேகுதே எம்நெஞ்சம்.
எங்கள் அன்புச் செல்வமே!
இப்புனிதநாளில் உந்தன்
ஆத்ம சாந்திக்கு செலுத்துகின்றோம்;
கண்ணீர் அஞ்சலிகள் தனையே.

வேதனையில் வாடித் தவிக்கும்:
ஐயா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
மருமக்கள், மற்றும் உறவினர்கள்.

கோ. கணேசலிங்கம்,
2 ஆம் வட்டாரம்,
பெரிய துறை,
நெடுந்தீவு மேற்கு.

(48923)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**செ. பஞ்சரத்தினம் அவர்கள்**

(குழந்தை)

(உரும்பிராய் தெற்கு)

தோற்றம்: 17 - 04 - 1925

மறைவு: 15 - 07 - 1997

எங்கள் குடிக்கொழுந்தே!

தங்கள் திடீர் மறைவு எங்களைத் திகைக்க வைத்து விட்டது. உயிர் உள்ள வரை எங்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து இருப்பீர்கள்.

உங்களது ஆன்மா சாந்தியுறும் வண்ணம் நாம் அனைவரும் இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

மனைவி, மக்கள்,
மருகர், பேரர்.

(48974)

## அளவெட்டி-நாகேஸ்வரம்
## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

மெய்யன்பர்களே!

நிகழும் ஈசுர வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் (16 - 08 – 1997) சனிக்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27 - 08 - 1997) புதன்கிழமை வரை மேற்படி உற்சவம் நிகழும். அன்பர்கள் அனைவரும் தரிசனஞ் செய்து இஷ்ட சித்திகள் பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

### விழாக்கால நேர ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| மு. ப. 8. 30 மணி | அபிஷேக பூசைகள் | பி. ப. 3. 00 மணி | ஸ்தம்பபூசை முதலியன |
| மு. ப. 9. 30 மணி | தம்பபூசை | பி. ப. 3. 30 மணி | வசந்த பூசை |
| மு. ப.10. 30 மணி | வசந்த பூசை | பி. ப. 4. 00 மணி | வீதி உலா |


| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம்: | 16 - 08 - 97 | சனிக்கிழமை | முற்பகல் 11. 30 மணி |
| தேர் வீதி வலம்: | 25 - 08 - 97 | திங்கட்கிழமை | முற்பகல் 10. 30 மணி |
| உறியடி உற்சவம்: | 25 - 08 - 97 | திங்கட்கிழமை | பிற்பகல் 4. 00 மணி |
| ஸ்ரீரங்கநாத பாதபூசை: | 26 - 08 - 97 | செவ்வாய்க்கிழமை | முற்பகல் 8. 30 மணி |
| தீர்த்தம்: | 26 - 08 - 97 | செவ்வாய்க்கிழமை | முற்பகல் 10. 30 மணி |
| ஆஞ்சனேயர் வைரவர்-பொங்கல் அபிஷேகம்: | 27 - 08 - 97 | புதன்கிழமை | முற்பகல் 8. 30 மணி |
| திருக்கல்யாணம்: | 27 - 08 - 97 | புதன்கிழமை | பிற்பகல் 2. 30 மணி |

பொ. ம. சபை

(48912)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 07 — 07 — 1938



உதிர்வு: 15 — 07 — 1997

**திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா**

அன்பின் இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசமெனும் நீரூற்றி
எமை வளர்த்த அம்மாவே!
பாதி வழியில் பரிதவிக்கவிட்டு
சென்றனையோ விண்ணுலகம்?
மாதமொன்று சென்றாலும்;
மறையாது உம் நினைவு:
வற்றாத கண்ணீருடன்
வணங்குகின்றோம் நாமிங்கே
அடைக உம் ஆத்மா சாந்தியென்று.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தோப்பு ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(48909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாவும் போரும்

மாவின் விலை கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் பாண் மற்றும் மாப் பண்டங்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன; உயர்த்தப்பட உள்ளன;

கோதுமை எமது நாட்டில் விளைவிக்கப்படும் தானியம் அல்ல. எனினும் எமது பிரதான தானியமான அரிசியை விட சற்று அதிகமாகவே உட்கொள்ளப்படுகிறது. மிகக் குறிப்பாக கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்படும் பாண் அனேகமாக இலங்கையின் சகல பகுதிகளிலும் உள்ள வீடுகளில் ஆகக் குறைந்தது ஒரு நேரச் சாப்பாடாகி விட்டது. சில வீடுகளில் இரண்டு மூன்று வேளைச் சாப்பாடும் அதுவே.

கோதுமை மேலை நாடுகளில் மட்டுமன்றிக் கீழைத் தேசங்களிலும் — உலகளாவிய — உணவுத் தானியமாகி விட்டதால் உலகச் சந்தையில் அதன் விலை அடிக்கடி உயர்ந்து வருகிறது.

இப்போதும், கோதுமை மாவின் விலை உலகச் சந்தையில் அதிகரித்ததாலேயே இங்கும் அதன் விலை உயர்த்தப்பட்டிருப்பதாக உணவு ஆணையாளர் அறிவித்திருக்கிறார். அவ்வாறில்லை என்றால் கூட மாவின் விலையை உயர்த்த வேண்டிய பொருளாதார நிர்ப்பந்தம் அரசுக்கு உண்டு.

காரணம் — வேறெதுவுமில்லை. தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் வடக்கு—கிழக்குப் போரினால் நாட்டின் நிதிவளம் வற்றிப் போயுள்ளமை தான்.

உணவுப் பொருள்கள் மீது கை வைத்தால் - விலை உயர்த்தினால்-மக்கள் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்பதனால் அரசு அதனை இயன்றவரை தவிர்த்து வருகிறது; தவிர்க்க முயல்கிறது. எனினும் போரினால் பொருளாதாரம் தேய்ந்து, மக்களின் வாழ்க்கை நிலை கீழே சென்றுள்ளதை எந்தத்திரை கொண்டும் அரசு மறைக்க முடியாது.

அழிவுக்கு வழிவகுக்கும் போருக்காக நாட்டின் பெரும் பகுதி நிதிவளம் செலவாகிக் கொண்டிருக்கிறது. மொத்த வருமானத்தில் ஆறு சதவீதம் போருக்காகச் செலவிடப்படுகிறது. இது மேலை நாடுகள் — செல்வந்த நாடுகள் — தமது பாதுகாப்புக்காகச் செலவு செய்யும் நான்கு சத வீதத்தையும் விட அதிகமானது என்பதனை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சிறிய நாட்டுக்கு பெரும் பணச் செலவில் போர் ஒன்று தேவை தானா?

போருக்கான செலவை நாட்டின் பொருளாதார வளத்துக்குப் பயன்படுத்தப் போகிறோம். போரை விரைவில் நிறுத்தி படையினரை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தப் போகிறோம் என்று ஜனாதிபதி தொடக்கம் அரச எம்.பிக்கள் வரை மேடைகளில் பேசுகின்றார்கள். ஆனால் போர் தொடர்கிறது.

போரை உண்மையாகவே நிறுத்தினால் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி உலக சந்தையில் கோதுமை மா போன்றவற்றின் பொருள்களின் விலைகள் உயர்வதால் உண்டாகும் தாக்கத்தை, பாதிப்பைத் தடுக்கலாம்.

பேச்சை நிறுத்தி செயலில் சாதிக்க அரசு முன்வர வேண்டும். மனமுண்டா?

# பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் மூன்றாம் நாளாகத் தொடர்கிறது

## அமைச்சரின் வாக்குறுதி நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 14

நாற்பது சதவீத சம்பள அதிகரிப்புக் கோரி பஸ் ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த வேலை நிறுத்தம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. இதனால் ஆயிரக்கணக்கான பஸ் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

நேற்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது 375 ரூபா சம்பள அதிகரிப்பும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இது தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டது.

40 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் வரை வேலை நிறுத்தத்தை தொடர்வது என தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன என அதன் தலைவர் ஜேம்ஸ் சாரியவாசம் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

(இ-10)

## பயணிகள்கப்பலைபெற அரசு கேள்விப் பத்திரம்

கொழும்பு, ஓக. 14

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் ஆழ்கடலில் — அதாவது கரையில் இருந்து 40 மைல் தூரத்தில் — சேவையில் ஈடுபடக்கூடிய கப்பலைப் பெறுவதற்காக உலகளாவிய கேள்விப்பத்திரம் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே கேள்விப்பத்திரம் கோரப்பட்டபோதிலும், இந்தக் கப்பலை உள்ளூரில் பெறமுடியாது போனதை அடுத்து இம்மாதம் 20 ஆம் திகதி வரை கேள்விப் பத்திரம், நீடிக்கப்பட்டு வெளிநாடுகளில் இருந்து கப்பலைப் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

பயணிகள் கப்பலுக்கு வழித்துணை வழங்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படாததை அடுத்தே கரையில் இருந்து 40 மைல் தூரத்தில் செல்லக்கூடிய கப்பலைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அதற்கான கேள்விப்பத்திரத்தைக் கோரியுள்ளது.

((இ-3-150)

## திருத்த வேலைகளுக்காக ‘குட்வில் கைட்’ காலி சென்றது

திருகோணமலை, ஓக. 14

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட திருகோணமலை வந்து சேர்ந்த ‘‘குட்வில் கைட்’’ கப்பல் திருத்த வேலைகளுக்காக காலி துறைமுகத்துக்கு சென்றுள்ளது

வடக்குக்கான பயணிகள் சேவையை நடத்த இக்கப்பல் திருகோணமலைக்கு வந்ததும்—

பயணிகளை ஏற்றிச் செல்ல அது தகுதியற்றது என அறிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

பயணிகளுக்கு ஏற்றவாறு மேலும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவே காலிக்கு அக்கப்பல் சென்றுள்ளது.

இந்தக் கப்பல் திருத்த வேலையை மேற்பார்வை செய்ய கொழும்பில் இருந்து பொறியியலாளர் குழு திருகோணமலை வர பின்னடித்தது என்றும்—

இதனையடுத்தே அக்கப்பல் காலி சென்றுள்ளது என்றும் கூறப்படுகிறது. (இ-3-150)

## கப்பல் வசதி இன்றி திருமலையில் தரித்துள்ளோருக்கு இடர் நிவாரணமாக 50 ரூபா

கப்பல் வசதியின்றி திருகோணமலையில் தரித்துள்ள 800 பேருக்கு இடர் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கப்பல் வசதியின்றி உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு இடர் நிவாரணமாக தினமும் 50 ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 பேருக்கு பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் 800 பேரே இது வரை இந்தக்கொடுப்பனவை பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண புனர் வாழ்வு அமைச்சு இந்தக் கொடுப்பனவுக்காக ஒன்றரை லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (இ-3-150)

## மின்சாரத்துக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 14

நெல்லியடிப் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன் இடம்பெற்ற மின்சார விபத்தில் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் நடராசா புவனம் (வயது 45) என்பவரே மரணமானவராவார்.

இவரது பிள்ளைகளான நடராசா அனுஷா (வயது 17), நடராசா ஐங்கரன் (வயது 14) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

குளித்துவிட்டுத் துடைப்பதற்காக துவாய் எடுக்கச் சென்றபோது, அறுந்து தொங்கிக்கொண்டிருந்த மின்சார வயரில் தாயார் சிக்கினார் என்றும் —

அவரைக் காப்பாற்றும் நோக்குடன் சென்ற பிள்ளைகளும் மின்சாரத்தால் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். (இ-15)

# வடக்கு - கிழக்கில் 1,000 ஆசிரியர் அடுத்த தவணை முதல் நியமனம்

கொழும்பு, ஓக. 14

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு அடுத்த மாதம் ஆரம்பமாகும் மூன்றாம் தவணையின் போது ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களைக் கொண்டே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற ஆயிரம் பேரின் பெயர் விவரங்கள் அடுத்த வாரம் வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கல்விச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் எஸ். ஏ. பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

விரைவில் கல்விச்சேவை ஆணைக்குழுவும், மாகாண கல்வி அமைச்சும் இணைந்து இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தவுள்ளன.

புதிதாக நியமனம் செய்யப்படவுள்ள ஆயிரம் பேரில் ஆரம்ப விஞ்ஞானம், கணிதம் உட்பட சகல துறை ஆசிரியர்களும் இடம் பெறுகின்றனர். (ஐ)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### நல்லூரை நோக்கி நீ ஓடு

நல்லூரை நோக்கி நீ ஓடிச் செல்லு
வேலவன் திருவடி நாடி ஓடிச் செல்லு
இடர்கள் பிணி தீர ஓடிச் செல்லு
முருகன் திருமேனி கண்களிக்க ஓடிச் செல்லு
தெள்ளுதமிழ் பாடிட ஓடிச் செல்லு
சரவணபவன் அருள் பெற ஓடிச் செல்லு
ஆறுமுகன் பாதமலர் பணிய ஓடிச் செல்லு
தடுமாறும் சிந்தை நலமாக ஓடிச் செல்லு
மயிலேறும் குமரனைக் காண ஓடிச் செல்லு
திருவருட் கருணைக் கதி பெற ஓடிச் செல்லு
ஓடிச் செல்லு - நீ ஓடிச் செல்லு - நல்லூர்க்
கந்தன் உற்சவம் காண நீ ஓடிச் செல்லு.

தமிழினி விஜயன்

## துப்பாக்கிச் சூட்டுடன் சடலம்

யாழ்ப்பாணம், ஓக. 14

சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக இனந் தெரியாத ஒருவரின் சடலம் நேற்று இளவாலைப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் மார்பிலும், ஏனைய இடங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இச் சடலம் இனம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(இ-15)

## கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் வடக்குப் பிரிவுக்கான பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-52)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ். பல்கலைக் கழகத்தின் 1996 / 97 ஆம் கல்வி ஆண்டுக்கு வெளி நிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்பமுடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வர்த்தக முதற்கற்கைநெறி, கலை முதற் கற்கைநெறி, பொதுக் கலைமாணி பகுதி -1, சிறப்புக் கலைமாணி பகுதி - 1, வர்த்தகமாணி பகுதி - 1 ஆகிய கற்கை நெறிகளுக்கு 30-08-1997 வரையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாயி சிந்தனை

நவீனத்துவம் என்று சொல்லக் கூடிய புதுவிதமான சமயம் ஒன்று இப்போது தோன்றி மக்களிடையே பரவி வருகிறது.

பழைமை என்பதனால் பழையதைத் தள்ளுதல்; புதுமை என்பதனால் புதியதில் மோகம்; மேலோட்டமான விடயங்களில் இன்பமுறுதல்; புரிந்து கொள்ளச் சிரமமான கருத்துகளையும், கற்றுக் கொள்ளக் கடினமான பண்புகளையும் ஒதுக்குதல்; பொறுப்புமிக்க கடமைகளையும், சங்கடமாகத் தோன்றும் பொறுப்புகளையும் விலக்குதல், உல்லாசம், இடம்பம், வாய் ஜாலம் — அந்த நவீனத்துவத்தின் கோலம் இது! நியதிகளையோ, வரையறைகளையோ அது மதிக்காது; அது கட்டுக்குள் நிற்காது; எல்லைக்குள் அடங்காது. வயது, அதிகாரம், கல்வித் தகுதி, நற்குணம் இவற்றுக்குப் பணியாது.

அந்த நவீனப்போக்கு அனுஷ்டானங்கள், சடங்குகள், உபவாச நோன்புகள், வழிபாடுகள் முதலானவற்றைப் பற்றிப் பண்டைய நூல்களில் விதிக்கப்பட்டுள்ளவற்றை எடுத்து எறிகின்றது.

அடக்கமும், நிதானப் போக்கும் உடையவர்களையும், பாரம்பரிய வழக்கங்களையும் மரபு நெறிகளையும் வலியுறுத்தும் முதியோரையும் பார்த்து நகைக்கின்றது. தீர்த்த யாத்திரையை அவர்கள் கண்டிக்கின்றார்கள். அவர்களின் மதிப்பில் பரிசுத்தமான, புனிதமான இடமென்று எதுவும் இல்லை. தெய்வத் திருமேனிகளை ஆராதித்து அடையும் ஆனந்தத்தையோ, ஞான ஒளியையோ அவர்கள் அறிய மாட்டார்கள். அது தெய்வத்துக்குச் செய்யும் முகத்துதி என்றும் மூடநம்பிக்கை என்றும் தள்ளிவிடுகின்றார்கள்.

ஆதாரம்:
Sathya Sai Speaks Vol V

## நாளை

ஆடி 30

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி
முன்னிரவு 11.33 வரை.
நட்சத்திரம்: மூலம்
காலை 7.08 வரை;
வரலக்ஷ்மி விரதம்
சுபநேரம்: 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35-12 05
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

போது 183 படையினரும் இரண்டாவது தாக்குதலின் போது 119 படையினரும் மூன்றாவது தாக்குதலின் போது 84 படையினரும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நடவடிக்கையின் போதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் போதும் 535 படையினர் கொல்லப்பட்டனர் எனவும் 400க்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்திற்குச் சொந்தமான 9 ஆட்லறிகள், 7 மோட்டரர்கள், மோட்டார்களுக்கான சுமார் 3 ஆயிரம் ஷெல்கள் ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தின் 8 கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன. 2 ஆட்டிலறி நிலைகள் அழிக்கப்பட்டுள்ளன. மற்றும் இராணுவத்துக்குச் சொந்தமான பல வாகனங்கள், இராணுவ முகாம், பல பொலீஸ் நிலையங்கள் ஆகியன தீயிடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாத இராணுவ நடவடிக்கைகளை அவதானிக்கும்போது "வெற்றி உறுதி" என்பதைவிட "வெற்றி அழிவு" என்றே கூறலாம்.

இந்த இராணுவ நடவடிக்கையால் 1 லட்சத்து 34 ஆயிரம் பொதுமக்கள் அகதிகளாகி மல்லாவி, துணுக்காய் கொருடமடு போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து ஒதுங்கி வாழ்கின்றனர்.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பல அரச கட்டிடங்கள் மற்றும் பொதுமக்களின் பல வீடுகள் முற்றாக அழிந்துள்ளன.

இந்த ராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த 4 ஆயிரம் பொது மக்கள் யாழ்ப்பாணம் செல்வதற்காக மன்னாரிலும் திருகோணமலையிலும் காத்திருக்கின்றனர்.

திங்கட்கிழமை மன்னாரில் இருந்து 293 பேரை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளது. 14 ஆயிரம் மக்கள் காத்திருக்கும் போது இது ஒருசிறு எண்ணிக்கையே ஆகும்.

இந்த நடவடிக்கையால் அதிகளவு அழிவுகள் பொது மக்களுக்கே ஏற்பட்டுள்ளன.

பலியான படையினருக்கான நஷ்டஈடுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஒருபுறமிருக்க கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள ஆயுதங்களும் யுத்த உபகரணங்களும் இழக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் சொத்து இழப்பிற்கும் நஷ்ட ஈடு வழங்கப்படுமாயின் விமானங்கள், கடற்படை ஆகியனவற்றிற்கு ஏற்பட்ட செலவுகளுக்கும் மேலாக "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கையில் இதுவரை செலவேற்பட்டுள்ளது.

எனவே அடிப்படை எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்றே கூறலாம்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-10)


# G.C.E. O/L

விஞ்ஞானம்

துரிதமீட்டலும் வினாவிடையும்

ஆரம்பம்- 15 - 08 - 97

வெள்ளி - 12. 00 மணி

விடுமுறைக்குள் பகல்நேரம் நடைபெறும்.

ஆசிரியர் திரு. தேவா

குறிப்பு: 1. மேற்குறிப்பிட்ட ஆசிரியருடைய வகுப்பு யாழ். நகரில் வேறு எந்தக் கல்வி நிறுவனத்திலும் நடைபெறமாட்டாது.

2. அச்சடித்த பாடக் குறிப்புகள், பயிற்சி வினா விடைகள் வழங்கப்படும்.

**COLLEGE OF COMMERCE**

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(47382)



## எமது புதிய வெளியீடுகள்!

விக்னேஷ், அமிர்தா

★ டேகிற் ஈஸி ஊர்வசி (ஒரிஜினல்)

ஆனந்ராஜ், ராதிகா

★ புதிய ஆட்சி (ஒரிஜினல்)

★ மின்சாரக்கனவு

★ பாசமுள்ள பாண்டியரே

என்பன வீடியோ C Dயில வெளிவந்துள்ளன. இவை நேரடியாக C Dயிலிருந்து பதிவு செய்து தரப்படும்.

**சுப்பஸோ வீடியோ**

யாழ்ப்பாணம்.

(சி/1314)



**MODERN EDUCATION CENTRE**

**KARAVEDDY**

**A/L 98, 99**

★ மின்னியல்

★ புலங்கள்

ஆரம்பம்: 15 - 08 - 1997

வெள்ளி பிற்பகல் 3 மணி

ஆசிரியர்:- திரு. குமரன்.

(சி/ 1309)


## ஐ நா...

(முதலாம் பக்கத் தொடர்)

பார்த்து மனிதாபிமான அடிப்படையில் அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவர பயணிகள் கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்க நாம் முன்வந்தோம்.

இது விடயமாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் வன்னியில் பேச்சுகள் நடத்தினோம்.

இந்த முயற்சி இன்னும் முடிவடையவில்லை. இன்னும் அவர்களுடன் பேச இடம் உண்டு. அத்துடன் எமக்கு நம்பிக்கையும் உண்டு.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பி, அடுத்த 10 நாள்களுக்குள் வன்னி சென்று விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் பேசவிருக்கிறேன்.

கப்பலுக்கு வழித்துணை வழங்கல், சிறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியன குறித்து விரிவாக அவர்களுடன் பேசுவேன்.

கப்பல்களுக்கு வழித்துணை வழங்க முடியாத நிலை ஏற்பட்டால் மக்களின் தாராள போக்குவரத்துக்கு மாற்று வழி ஏதும் இருந்தால் அது தொடர்பாக ஆராயவிருக்கிறோம்.

வன்னியில் இருந்து குருநகர் வரும் மக்கள் கடலில் அரைவாசியில் இறக்கி விடப்படுகின்றனர்.

சிறு படகுகளை அனுப்பி அவர்களைக் கரைக்கு அழைத்து வர சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி வருகிறோம்.

வன்னிக்கு வரும் உணவுப் பொருள்கள் போதுமானதா? இல்லையா? என்பதனை அளவிடபோதிய ஆவணியினர் அங்கு எமக்கு இல்லை. மருந்துத் தட்டுப்பாடு அங்கு உள்ளது என்பதை அறிகிறோம்.

எதியோப்பியா போன்ற நாடுகளில் உள்ளது போல அங்கு பசி; பட்டினிஇல்லை—

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# புளியங்குளம் நோக்கி நகர படையினர் முயற்சி

## விமானம், ஹெலிகள் தாக்குதல்

வவுனியா, ஓக. 14

பெரியமடுவில் இருந்து புளியங்குளம் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு முன்னேற முனைந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக வவுனியாவில் தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணியில் இருந்து முன்னேறிவந்த ஒரு படை அணியும், நொச்சிமோட்டையில் இருந்து முன்னேறிய ஒரு படையணியும் பெரியமடுப்பகுதியில் இணைந்த பின்னர் புளியங்குளத்தை நோக்கி முன்னேற முயன்று வருகின்றன.

நேற்று முன்தின இரவு விமானங்களும், ஹெலிகளும் அப்பகுதியில் தாக்குதல் நடத்தின.

ஆனால் சேத விவரங்கள் வெளியாகவில்லை. (இ3-164)

# எம். ஐ. 24 ஹெலிக்கொப்டரை இறக்குமதி செய்ய முயன்றனராம்

## தமிழர் உட்பட மூவர் கைது!

கொழும்பு, ஓக. 14

வெளிநாட்டில் இருந்து அரசின் அனுமதியின்றி எம். ஐ. 24 ஹெலிக்கொப்டர்களை இறக்குமதி செய்ய முயன்றதாக கைதான தமிழர் உட்பட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

வர்த்தகர்களான ராஜன் வைரவநாதன், தாச் சாலிக், ரஞ்சித் தகநாயக்க ஆகிய மூவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் கொழும்பு நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (இ-3-21)

# லேபல் இல்லாத கொள்கலனில் மருந்துக் குளிகைகள் விற்பனை

திருநெல்வேலி, ஓக. 14

லேபல் இல்லாத கொள்கலனில் வைத்து மருந்துக் குளிகைகளை விற்பனை செய்துவந்த தனியார் மருந்தக (பார்மஸி) உரிமையாளர் ஒருவர் திடீர் பரிசோதனையின் போது சிக்கினார்.

யாழ். மாவட்ட உணவு - மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் யாழ். மாநகர சபை பகுதியிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலும் பார்மஸிகளிலும் திடீர் பரிசோதனை நடத்தியபோது இது கண்டுபிடிக்கப்பட்டது.

லேபல் இல்லாத மருந்துப் பொருள்கள் உணவு—மருந்து பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டு மேல்நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

இதே வேளை குறிப்பிட்ட பார்மஸியில் சுகாதாரத் திணைக்களத்துக்கு சொந்தமான DHS என்ற குறியீடு பொறிக்கப்பட்ட மருந்துக் குளிகைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இது பற்றி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-135)

## முல்லைத்தீவில் பாத யாத்திரை

வவுனியா, ஓக. 14

முல்லைத்தீவில் பஜனையும் பாதயாத்திரையும் நாளை முதல் மூன்று தினங்கள் நடைபெறவிருக்கின்றன.

முல்லைத்திவு சைவமக்கள் கழக ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. (இ-3-164)

## பாதை...

(முதலாம் பக்கத் தொடர்)

யாவில் இருந்து பூவரசம் குளம், இரணை இலுப்பங் குளம்ஊடாக மூன்றுமுறிப்பு, மாங்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கு செல்லக் கூடியதாக பாதை ஒன்றைத் திறக்க வவுனியா அரச அதிபர் முயற்சி எடுத்துள்ளார்.

இராணுவ அதிகாரிகளுடன் இது குறித்துப் பேசியுள்ளதாகவும்—

விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெற நேற்று தமது பிரதிநிதியாக ஓர் அதிகாரியை அங்கு அனுப்பியுள்ளதாகவும்—அரச அதிபர் தெரிவித்தார்.

இதற்குச் சாதகமான பதிலை புலிகளிடம் தாம் எதிர்பார்ப்பதாகவும்—

அதன்பின் இராணுவத்தினருடனும் பேசி விரைவில் இப்பாதை திறக்கப்படலாம் என்றும் — அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தப்பாதை திறக்கப்பட்டால் வன்னிக்கான உணவு வாகன அணி இதன் மூலம் செல்ல முடியும் என்றும் —

பொதுமக்களும் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

## வெற்றி தோல்வி இன்றி முடிந்த கிரிக்கெட்

கொழும்பு, ஓக. 14

இலங்கைக்கும், இந்தியாவுக்குமான 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட போட்டித் தொடர் நேற்று கொழும்பில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வெற்றிபெற 373 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2ஆவது இனிங்சை தொடர்ந்த இந்திய அணி ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 281 ஓட்டங்களைப் பெற்றது. அசாருதீன் ஆட்டம் இழக்காமல் 108 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தப் போட்டியின் சிறந்த வீரனாக அரவிந்த டி சில்வாவும் போட்டித் தொடரின் ஆட்ட நாயகனாக சனத் ஜயசூரியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. (இ-10)


# நல்லைக் குமரன் மலர் - 1997

# வெளியீட்டு விழா

தலைவர்: திரு. வே.பொ. பாலசிங்கம் (மாநகர ஆணையாளர்)

காலம்: 15-08-1997 வெள்ளிக்கிழமை முற்பகல் 8-30 மணி (பழைய நேரம்)

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

ஆய்வுரை: கலாநிதி எஸ். சிவலிங்கராஜா (முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பக்திமணம் பரப்பும் மலரைப் பெற்று படித்துப் பயன்பெற ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13-08-1997

(சி/1312)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org